**Public (General.1) Department**
**Secretariat, Chennai-600009.**

## NOTIFICATION

The "Kabir Puraskar" award for the act of social and communal harmony will be presented by the Hon'ble Chief Minister of Tamil Nadu every year during Republic Day Celebrations. Any Indian citizen residing in Tamil Nadu (other than members of the Armed Forces, Police Forces and Members recognized Fire Services, Government Servants, if the act performed by them falls in the sphere of their duty) are eligible for this award. The award is given for act of physical/moral courage and humanity exhibited by members of one community in saving the lives and properties of the members of another community during communal riots. This award consisting of three categories and the cheque for Rs.20,000/-, Rs.10,000/- and Rs.5,000/- with citation will be given to three persons respectively.

2. The eligible nominations for "Kabir Puraskar" award for the year 2021 accompanying relevant documents through the District Collector concerned or through online **https://awards.tn.gov.in/** should reach the Principal Secretary to Government, Public Department, Secretariat, Chennai-9 on or before 14.12.2020. The applications which are not received within the prescribed time will be rejected. The awardees will be selected by the selection committee constituted for this award. The medal will be presented to the awardees by the Hon'ble Chief Minister during the Republic Day Celebrations on 26th January 2021.

**P. SENTHILKUMAR**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT (FAC)**

பொது (பொது–1)த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–9.

## அறிவிப்பு

சமுதாய மற்றும் வகுப்பு நல்லிணக்கத்திற்கான கபீர் புரஸ்கார் விருது, ஒவ்வொரு ஆண்டும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், குடியரசு தின விழாவின் போது வழங்கப்படுகிறது. தமிழகத்தில் வசிக்கும் அனைத்து இந்திய குடிமக்களும் (ஆயுதப்படை வீரர்கள், காவல், தீயணைப்புத் துறை மற்றும் அரசுப் பணியாளர்கள் நீங்கலாக அவர்களின் சமுதாய நல்லிணக்க செயல் அவர்கள் அரசுப் பணியின் ஒரு பகுதியாக நிகழும் பட்சத்தில்), இப்பதக்கத்தினைப் பெறத் தகுதியுடையவராவர். இவ்விருதானது, ஒரு சாதி, இனம், வகுப்பைச் சார்ந்தவர்கள் பிற சாதி, இன, வகுப்பைச் சார்ந்தவர்களையோ அல்லது அவர்களது உடைமைகளையோ வகுப்புக் கலவரத்தின் போதோ அல்லது தொடரும் வன்முறையிலோ காப்பாற்றியது வெளிப்படையாகத் தெரிகையில் அவரது உடல் மற்றும் மனவலிமையைப் பாராட்டும் வகையில் வழங்கப்படுகிறது. இவ்விருதானது மூன்று அளவுகளில், தலா ஒரு நபர் வீதம் மூவருக்கு வழங்கப்படுகிறது. முறையே ரூ.20,000/-, ரூ.10,000/- மற்றும் ரூ.5,000/-க்கான காசோலை மற்றும் தகுதியுரை ஆகியவை இதில் அடங்கும்.

2. 2021 ஆம் ஆண்டு, குடியரசு தினத்தன்று வழங்கப்படவுள்ள கபீர் புரஸ்கார் விருதிற்கென தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் (Applications) அவை தொடர்பான ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவோ அல்லது **https://awards.tn.gov.in/** என்ற இணைய தளம் மூலமாகவோ அரசு முதன்மைச் செயலாளர், பொதுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை- 600 009 அவர்களுக்கு 14.12.2020-க்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். உரிய காலத்திற்குள் பெறப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். பதக்கம் பெறத் தகுதியுள்ளவர், இதற்கென அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 26.01.2021 குடியரசு தினத்தன்று பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படுவர்.

**ப. செந்தில்குமார்**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)**